**தன்னைதானே நம்புகிறவன் தொலைந்து போவான். கடவுளை நம்புகிறவன் எல்லாவற்றையும் சாதிக்க முடியும்.**

– புனித லிகொரி அல்போன்ஸ்

படகில் பயணம் செய்யும் சீடர்களை நோக்கி இயேசு வந்தார். காற்று மற்றும் இருள் காரணமாக அவரை அடையாளம் காண அவர்களால் முடியவில்லை. மேலும் அச்சம் அவர்களிடையே மேலிட்டிருந்தது. கிறிஸ்துவின் உடனிருப்பினால் கடல் அமைதியானது. சீடர்கள் மத்தியிலும் ஆழ்ந்த அமைதி ஏற்பட்டது. எதிர்க்காற்று நின்றது, நெருக்கடி தீர்ந்தது.

பலவிதமாக மனத்தளர்ச்சியும் மன அழுத்தமும் ஏற்படும் நமது வாழ்க்கையோடு இந்த சூழ்நிலையைப் பார்த்தால்,அவநம்பிக்கை கொள்ளுமளவுக்குத் தள்ளப்படும் பேதுருவைப் போல் நாமும் இருப்போம். வாழ்க்கையில் திடீர் மாற்றம் ஏற்படும் போது நமது குடும்ப அமைதிக்கு மருட்டலை ஏற்படுத்தும் எதிர்க்காற்று அபாயத்தை நாம் எதிர்நோக்குகிறோம். இம்மாதிரியான சூழ்நிலையில் நமது நம்பிக்கை தளரும், நமது வாழ்க்கையில் கிறிஸ்துவின் உடனிருப்பை நாம் நினைவில் கொள்ள வேண்டும். “துணிவோடிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்” என்ற உற்சாகமும் ஆக்கமூட்டும் வரமும் கொண்ட அவரது வார்த்தைகள் நமக்குப் புத்துயிர் அளிக்கும்.

வாழ்க்கைப் பயணத்தில் உண்மை இலக்கை நோக்கி நம்மை வழிநடத்திச் செல்ல கிறிஸ்துவின் உதவி நம் அனைவருக்கும் தேவைப்படுகிறது. மூழ்கும் அபாயத்தாலும் அச்சத்தாலும் நிலைக்குலைந்து போன நெருக்கடியான தருணம் வரும்போதும் மட்டுமே இயேசுவை நோக்கி மன்றாடுவது பேதுருவின் தவறு. பேதுருவைப் போல நாமும் இருக்கிறோம். எல்லாம் நல்லப்படியாக நடக்கும் போது கடவுளை மறந்து விடுகிறோம், பிரச்னையும் அசம்பாவிதங்களும் நிகழும் போதுதான் கடவுளை நோக்கி உண்மையாகவே மன்றாடுகிறோம். எல்லாத் தருணத்திலும் உதவி செய்ய கிறிஸ்து தயாராகயிருக்கிறார். இயேசுவின் அழைப்புக்கு செவிகொடுத்து, அவரில் நிபந்தனையற்ற நம்பிக்கை வைத்தால் போதும். இயேசுவின் உடனிருப்பு நம் வாழ்வில் எம்மாதிரியான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது என்பதை அவரே காட்டுவார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் நம்பிக்கையும் இறைவேண்டலும் முக்கியமானவை. மனவுறுதியோடு கிறிஸ்துவைப் பின்செல்ல நாம் அழைக்கப்படுகிறோம். வாழ்வில் சோதனை காற்று வீசும் போது துணிவு கொள்வோம். கடலில் மூழ்கி விடுவோம் என ஐயம் கொள்ள வேண்டியதில்லை. ஏந்திய கரத்தோடு நம்மை தூக்கிவிட ஆண்டவர் காத்துக் கொண்டிருக்கிறார். நெருக்கடி நேரத்தில் இயேசுவை நோக்கி நடக்க நாம் கற்றுக் கொள்வோம். அதிகாரம், பதவி, பாதுகாப்பு அரண் முதலியவை நமது நிலையற்றக் காலத்தில் கை கொடுக்கும் என்றிராமல், இயேசுவைச் சந்திக்க ஆர்வம் கொள்வோம். பேதுருவைப் போல நாமும் அச்சம் கொண்டு தடுமாறி மூழ்க முடியும். அவரைப் போல் நமக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டால், இயேசுவின் உதவிக் கரம் நம்மை மீட்க காத்திருக்கிறது. அப்போது நமது செவிகளில் ஒலிப்பது “நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?”.

இயேசுவின் மீதான நம்பிக்கைக்குப் புத்துயிர் கொடுப்போம். தென்றல் போன்ற அவரது உடனிருப்பை உணருவோம். அச்சம் கொள்ள வேண்டாம்! ✝

**இன்றைய வாசகங்கள்:**

1அரச. 19:9, 11-13;

திபா. 84: 9-14;

உரோ. 9:1-5;

மத். 14:22-33

**வாரம் ஒரு வசனம்**

‘துணிவோடிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்’

INTERNAL CIRCULATION ONLY
BUL 32/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

9 ஆகஸ்ட்டு 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 19ம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:

**ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு**

## தண்ணீரில் நடக்க நம்முள் எத்தனை பேருக்கு துணிவுண்டு?

வேண்டுகோளோடு வரும் யூத இனத்தைச் சேராத புறவினத்துப் பெண் இயேசுவைச் சந்திப்பது பற்றி இன்று நற்செய்தியில் வாசிக்கிறோம். பேதுரு பரவசமானார். இப்போது தண்ணீரில் தம்மால் நடக்க முடியும் என்பதைக் கண்ட பேதுரு பரவசமானார்.

எதிர்க்காற்று அடித்து அலைகளால் அலைக்கழிக்கப்படும் படகில் சீடர்கள் இருப்பதை, இன்றைய திருஅவைக்கு ஒப்பிடலாம். அச்சம் ஆட்கொள்ள எல்லாவிதமான அந்நிய சக்தியாலும் திருஅவை மருட்டப்படுகிறது. அந்த படகாக இருக்கும் இன்றைய திருஅவையைப் பாதிக்கும் நெருக்கடியின் கண்ணோட்டத்தில் இந்த நற்செய்தியை எவ்வாறு காண்பது?

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
**மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்**
*2020 ஆகஸ்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
***ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 9.00 - மாலை 5.30
சனி: காலை 9.00 - மதியம் 1.30
(மறு அறிவித்தல் வரை)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு** **08 – 09 ஆகஸ்டு 2020**
1 அரச 19: 9, 11-13 தி.பா: 85: 8, 9, 10-11, 12-13 உரோ 9: 1-5 மத்தேயு 14: 22-33
**“ஆண்டவரே உம் பேரன்பையும் மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.!**

**நிரந்த குடியுரிமை மற்றும் வெளி நாட்டுதொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

அடுத்த வாரத்தில் இருந்து (ஆகஸ்ட் 2020) திருப்பலிகளில் பங்கெடுக்க விருப்பமுள்ள பங்கு மக்கள் இனி உங்கள் அதிச மற்றும் சோன் பொறுப்பாளர்களிடம் உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு திருப்பலியிலும் 380 பேர் மட்டுமே பங்கெடுக்க முடியும். அனைத்துப் பெயர்களும் பங்கு அலுவலகத்தில் வியாழக்கிழமை அன்று ஒப்படைக்கப்பட வேண்டும்.

**09-08-2020 (** ஞாயிறு) காலை 9.00 மணி ( மாண்டரின்) காலை 11.30 தேசிய மொழி அவ்வப்போது
**திருப்பலிகளின் நேரம் மற்றும் மொழிகள் மாற்றம் காணும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.**
அதே நேரத்தில் ஆலயத்தின் திருப்பலிகள் நேரடியாக இணையத்தின்வழி ஒளிப் பரப்பப்படும். :*http://live.visitationseremban.org*

குறிப்பு:

1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கான முகக்கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்திற்கு திருப்பலி தொடங்குவதற்கு ஒன்றரை மணி (1 1/2 ) நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். பதிவு மற்றும் இதர தயாரிப்புகள் செய்வதற்கு இது தேவைப்படுகிறது.

**நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)**

1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
3) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
4) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
5) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
6) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
7) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
8) தொடுதல் / அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
9) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்பு பங்கு மக்களே, பங்கு மனித வளமேம்பாட்டுப் பணிக்குழுவின் உணவு வங்கிக்கு நீங்கள் கொடுத்து வரும் வற்றாத ஆதரவுக்கு நன்றி. நீங்கள் கொடுக்கும் உணவுப்பொருட்களை வாங்கும்போது இருக்கும் பொட்டலமாகவே தரவும்,மீண்டும் அதை நீங்கள் வேறு பொட்டலமாக மாற்றவேண்டாம். தொடர்ந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உணவுப் பொருட்களை வழங்குபவர்கள் ஞாயிறு திருப்பலிக்கு வரும்போது, வாயில் எண் 2 ( பாதுகாப்பு சோதனை இடம்) அருகே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 02 *ஆகஸ்டு*) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| **பங்கு காணிக்கை** | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 48,758.00** | **RM 29,188.00** | **RM 10555.00** |

*உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.*
*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**உங்களின் கவனத்திற்கு:**

மரித்தோருக்கான சடங்குகள் இல்லங்களில் நடத்தப்படாது. மினவுதல் தேவாலயத்தின் இறந்தோருக்கான சடங்கு அறையில் நடைபெறும். இது உடனடி நடப்புக்கு வருகிறது.

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பௌ்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

- **உறுதிபூசுதல் அருளடையாளக் கொண்டாட்டத் திருப்பலி**
  ஆகஸ்ட் 30, 2020 ( சனிக்கிழமை) பகல் 2.00 மணி
  உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்புகள் 26-07-2020 ( ஞாயிறு) முதல் நடைபெறும்.
  **வகுப்புகள் நடைபெறும் கால அட்டவணை:**
  ஆங்கிலம்: காலை 8.00 - 9.30 தமிழ் காலை 9.45 - 11.15
  மாண்டரின்: காலை 11.30 - 1.00 (பகல்) வரை
  **வகுப்பறை: ஆலய மண்டபத்தின் மேல்மாடி அறை.**
  அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளும் கண்டிப்பாக பின்பற்றப் பட வேண்டும்
  **உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான ஒப்புரவு அருளடையாளக் கொண்டாட்டம் மற்றும் குருவானவரோடு சந்திப்பு:**
  **ஆகஸ்ட் 22, 2020 (வெள்ளி) திருப்பலிக்கான ஒத்திகை: ஆகஸ்ட் 28, 2020**
- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது

**குழந்தைகளுக்கான திருமுழுக்கு அருளடையாளம்:**
**தமிழ்** - 08-08-2020 மாலை 7.00 மண் **ஆங்கிலம்**: 15-08-2020 மாலை 7.00மணி
**தேமொழி & மாண்டரின்** : 22-08-2020 மாலை 7.00மணி
இதுவரை பதிந்துகொள்ளாதவர்கள் விரைவில் பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆங்கில பாடல் குழுவில் ( ஞாயிறு திருப்பலி காலை 9.00மணி) இணைந்துப் பாட புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ள: திரு. டேனியல் ராம் -012-6588715